பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
26 08 2024 **MONDAY** 7. 15 **AM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நீதித்துறையில் சீர்திருத்தங்களை கொண்டு வர வேண்டியது காலத்தின் கட்டாயம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. பகவான் கிருஷ்ணர் அவதரித்த தினம், கிருஷ்ண ஜெயந்தி நாளாக இன்று நாடுமுழுவதும் கொண்டாடப்படுகிறது.

3. மலையாள திரைப்பட உலகில் எழுந்துள்ள பாலியல் புகார்கள் குறித்து விசாரிக்க காவல்துறை ஐஜி. தலைமையிலான 7 பேர் கொண்ட குழுவை கேரள அரசு அமைத்துள்ளது

4. இஸ்ரேலுக்கும், ஹிஸ்புல்லா அமைப்பினருக்கும் இடையே நடந்து வரும் சண்டையை நிறுத்தி, அப்பகுதியில் அமைதி நிலவ இருதரப்பினரும் முன்வர வேண்டும் என்று ஐ.நா பொதுச்செயலாளர் திரு. அன்டோனியோ குட்டரஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. 20 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து போட்டியில் இன்று நடைபெறவுள்ள அரையிறுதிப் ஆட்டத்தில் இந்திய அணி – பங்களாதேஷ் அணியை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

நீதித்துறையில் சீர்திருத்தங்களை கொண்டு வர வேண்டியது காலத்தின் கட்டாயம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநில உயர்நீதிமன்றத்தின் 70வது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி, ஜோத்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அப்போது பேசிய அவர், தேவையற்ற சட்டங்களை களைந்து, புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

சாதாரண மக்களுக்கு நீதி வழங்குவது எளிமையானதாகவும், தெளிவானதாகவும் இருக்க வேண்டும் என்று கூறினார்.

நீதி துறையில் சீர்திருத்தங்களை கொண்டு வர வேண்டியது காலத்தின் கட்டாயம் என்றும், புதிய சட்டங்கள் மற்றும் சீர்த்திருத்தங்கள் மூலம் புதிய இந்தியா படைக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

நீதித்துறையில் புதிய தொழில்நுட்பங்கள் முக்கிய பங்காற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

குறிப்பாக, நீதிமன்றங்கள் மின்னணுமயமாக்கப்படுவது மிகச் சிறந்த உதாரணம் என்றும் அவர் கூறினார்.

நாட்டில் 18 ஆயிரம் நீதிமன்றங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

இதன் மூலம் சாதாரண மக்கள் அதிக அளவில் பயனடைந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தேசத்திற்கு முதலிடம் என்ற விதத்தில் உயர்நீதிமன்றங்கள் மற்றும் உச்சநீதிமன்றம் சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இவ்விழாவில் ராஜஸ்தான் மாநில ஆளுநர் திரு. ஹரிபாபு கிருஷ்ணராவ் பாக்டே, முதலமைச்சர் திரு. பஜன்லால் ஷர்மா, உச்சநீதிமன்ற மூத்த நீதிபதி சஞ்சீவ் கண்ணா, மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு. அர்ஜூன்ராம் மெஹ்வால், ராஜஸ்தான் மாநில உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவத்சவா ஆகியோர் கலந்து கொண்டனர்.

\>>>>><<<<<

மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல், சிங்கப்பூர் சென்றுள்ளார்.

சிங்கப்பூர் அரசுடன் இருதரப்பு வர்த்தக உறவுகள் மற்றும் முதலீகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார். மேலும் உலக வர்த்தக தலைவர்களை அவர் சந்தித்து பேசுகிறார்.

இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தக ஒத்துழைப்புகள் மற்றும் முதலீட்டுக்கான வாய்ப்புகள் குறித்து அவர் விவாதிக்கவுள்ளதாக வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களில் அதிக அளவில் முதலீடுகளை ஈர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை அவர் மேற்கொள்கிறார்.

சிங்கப்பூரில் அமைந்துள்ள தொழில் கல்வி நிறுவனத்தின் தலைமையிடத்திற்கு செல்லும் அவர், புதிய வாய்ப்புகள் குறித்து அமைச்சர் விவாதிக்கவுள்ளார்.

>>>>><<<<<

பிரேஸில் நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Mauro Vieira** நான்கு நாள் பயணமாக நேற்று மாலை புதுதில்லி வந்துள்ளார்.

இந்தியா – பிரேஸில் இடையேயான உறவுகளை வலுப்படுத்தும் விதத்தில் அவரது பயணம் அமைந்திருப்பதாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று புதுதில்லியில் நடைபெறும் 9-வது இந்திய – பிரேஸில் கூட்டுக்குழு கூட்டத்தில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், பிரேஸில் வெளியுறவு அமைச்சர் திரு. **Mauro Vieira** ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

கடந்த ஆண்டு இந்தியா, ஜி.20 நாடுகளின் கூட்டத்தை மிகச் சிறப்பாக நடத்தியதை அடுத்து, இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து இருவரும் விவாதிக்கின்றனர்.

மேலும், இருநாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு, பல்வேறு துறைகளில் இருநாடுகளுக்கும் இடையில் செயல்படுத்தக்கூடிய திட்டங்கள் குறித்து இரு அமைச்சர்களும் கலந்து ஆலோசிக்கின்றனர்.

இந்த ஆண்டுக்கான ஜி.20 நாடுகளின் தலைமை பொறுப்பை பிரேஸில் வகித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

>>>>><<<<<

பகவான் கிருஷ்ணர் அவதரித்த தினமான இன்று கிருஷ்ண ஜெயந்தி நாளாக நாடுமுழுவதும் கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, கிருஷ்ணர் ஆலயங்களில் பல்வேறு சிறப்பு பூஜைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கிருஷ்ணர் பிறந்த உத்தரபிரதேச மாநிலம், மதுராவில் உள்ள பிருந்தாவன் விழாக்கோலம் பூண்டுள்ளது.

அங்குள்ள கிருஷ்ணர் கோவில் வண்ண மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது.

ஏராளமான பக்தர்கள் அங்கு வழிபாடு செய்வதற்காக குவித்துள்ளனர்.

அதேபோல, ஹரே கிருஷ்ணா ஆலயங்களில் சிறப்பு பூஜைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தமிழகத்தில் பெருமாள் மற்றும் விஷ்ணு கோவில்களில் கிருஷ்ண ஜெயந்தி உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

கோகுலாஷ்டமியை ஒட்டி குடியரசுத்தலைவர், குடியரசு துணைத்தலைவர் உள்ளிட்டோர் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் போதனைகளை அர்ப்பணிப்பு உணர்வுடன் பின்பற்றி மகிழ்ச்சி காணும் நன்னாள் கோகுலாஷ்டமி என்று குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீமத் பகவத் கீதை, மனித சமுதாயத்திற்கு வழிகாட்டியாக அமைந்துள்ளதாக திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், தெய்வீக அன்பு, ஞானம், நீதி ஆகியவற்றை உள்ளடக்கிய கிருஷ்ண ஜெயந்தி, ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த நன்னாள் என்று குறிப்பிட்டுள்ளார்.

தீமைக்கு எதிரான நன்மையின் வெற்றி, ஈகை பண்பு ஆகியவற்றை மனிதகுலத்திற்கு எடுத்துரைக்கும் நாளாக இந்நாள் அமைந்துள்ளது என்றும் குடியரசு துணைத்தலைவர் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

இஸ்ரேலுக்கும், ஹிஸ்புல்லா அமைப்பினருக்கும் இடையே நடந்து வரும் சண்டையை உடனடியாக நிறுத்தி, அப்பகுதியில் அமைதியையும் பாதுகாப்பையும் ஏற்படுத்துவதற்கு முன்வர வேண்டும் என்று ஐ.நா பொதுச்செயலாளர் திரு. அன்டோனியோ குட்டரஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் நிறைவேற்றப்பட்ட 1 7 0 1 தீர்மானத்தின்படி, சண்டையை நிறுத்தி, அமைதிப் பாதைக்கு திரும்ப வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

ஹிஸ்புல்லா அமைப்பின் நிறுவனர் தலைவர் **Fouad Shukur** கொல்லப்பட்டதை அடுத்து எந்த நேரமும் ஹிஸ்புல்லா தாக்குதல் நடத்தும் என்ற நிலையில், இஸ்ரேல் ராணுவம் 100 ராக்கெட்கள் மூலம், லெபனான் மீது தாக்குதல் நடத்தியது.

இதற்கு தக்க பதிலடி கொடுக்கும் விதத்தில் 321 ராக்கெட்டுகள் மற்றும் ட்ரோன்கள் மூலம், ஹிஸ்புல்லா அமைப்பினர், இஸ்ரேலின் ராணுவ முகாம்கள் மீது தாக்குதல் நடத்தியது. இதனால் இப்பகுதியில் தற்போது பதற்றம் நிலவி வருகிறது.

**>>>>><<<<<**

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவை தேர்தல் நடைபெறுவதை ஒட்டி, பிஜேபியின் மத்திய தேர்தல் குழுக் கூட்டம் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி, பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டா, மத்திய அமைச்சர்கள் திரு. அமித் ஷா, திரு. ஜிதேந்திர சிங் மற்றும் கட்சியின் மூத்த தலைவர்கள் பங்கேற்றனர்.

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவை தேர்தலில் பிஜேபி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள் இறுதி செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>><<<<<**

இந்தியாவின் முதல்நிலை போர்க்கப்பலான ஐஎன்எஸ்-மும்பை மூன்று நாள் பயணமாக இன்று இலங்கை செல்கிறது.

ஐஎன்எஸ்-மும்பை கப்பல் அந்நாட்டிற்கு செல்வது இதுவே முதல்முறையாகும்.

இந்த பயணத்தின்போது, இலங்கையின் கப்பற்படையின் ரியர் அட்மிரல் குமரசிங்கே-வை, ஐஎன்எஸ்-மும்பை கப்பலின் கமாண்டிங் ஆபிஸர் சந்தித்து பேசுகிறார்.

அதன் பின்னர், இருநாடுகளின் கடற்படையினரும், விளையாட்டு, யோகா மற்றும் கடற்கரை பகுதியை சுத்தம் செய்வது ஆகிய பணிகளில் ஈடுபடுகின்றனர்.

பின்னர், இலங்கை கடற்படையினரின் பல்வேறு ஒத்திகை நிகழ்ச்சிகளை இந்திய வீரர்கள் பார்வையிடுகின்றனர்.

>>>>><<<<<

மலையாள திரைப்பட உலகில் எழுந்துள்ள பாலியல் புகார்கள் குறித்து விசாரிக்க காவல்துறை ஐஜி. தலைமையிலான குழுவை கேரள அரசு அமைத்துள்ளது.

சமீபத்தில் இந்தக் குழுவில் நான்கு பெண் ஐபி.எஸ். அதிகாரிகள் உள்ளிட்ட 7 பேர் இடம்பெற்றுள்ளனர்.

மலையாள திரைப்பட துறையில் சமீபகாலமாக எழுந்துள்ள பாலியல் குற்றச்சாட்டுகளை விசாரிக்க நீதிபதி ஹேமா தலைமையிலான குழு அமைக்கப்பட்டு, விசாரணை நடைபெற்றது.

இதனையடுத்து, சமீபத்தில் இந்தக் குழு மலையாள திரைப்படத் துறையில் நிகழும் பாலியல் குற்றங்கள் தொடர்பாக விரிவான அறிக்கையை கேரள அரசிடம் தாக்கல் செய்தது.

அதன் விவரங்களை அம்மாநில அரசு சமீபத்தில் வெளியிட்டது.

இது மலையாள திரைப்பட உலகில் மட்டுமல்லாமல் கேரள மக்களிடம் அதிர்வலைகளை உருவாக்கியது.

>>>>><<<<<

மேட்டுப்பாளையத்திலிருந்து இயக்கப்படும் நீலகிரி மலை ரயில் சேவை, இம்மாதம் 31ஆம் தேதிவரை ரத்து செய்யப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

கடந்த ஆகஸ்ட் ஒன்றாம் தேதி அதிகாலை பெய்த கனமழை காரணமாக, மேட்டுப்பாளையம் - உதகை இடையேயான ரயில் பாதையில் மண் சரிவு ஏற்பட்டு மலை ரயில் சேவை நிறுத்தப்பட்டது.

அதன் சீரமைப்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வந்தன.

திட்டமிட்டபடி சீரமைப்பு பணிகள் நிறைவடையாத நிலையில், மேட்டுப்பாளையம் - உதகை இடையேயான மலை ரயில் சேவை ரத்து செய்யப்படுவதாக ஏற்கனவே ரயில்வே நிர்வாகம் அறிவித்திருந்தது.

இந்நிலையில், நீலகிரியில் கனமழை எச்சரிக்கை மற்றும் சில இடங்களில் மண் சரிவு ஏற்பட்டுள்ளதால். இம்மாதம் 31ஆம் தேதி வரை மலைரயில் சேவை ரத்து செய்யப்படுவதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான், குஜராத், மஹாராஷ்ட்ரா மற்றும் கோவாவில் அடுத்த மூன்று நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மத்தியப்பிரதேசத்தின் வடமேற்கு மற்றும் ராஜஸ்தானின் கிழக்குப் பகுதியில் நிலவிவரும் காற்றழுத்த தாழ்வுப் பகுதி, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதியாக மாறியுள்ளது.

இது, தெற்கு ராஜஸ்தான், குஜராத், சௌராஷ்ட்ரா, கட்ச் ஆகிய பகுதிகளுக்கு நகரக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

காத்மாண்டுவில் நடைபெற்று வரும் 20 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து போட்டியில் இன்று நடைபெறவுள்ள அரையிறுதிப் ஆட்டத்தில் இந்திய அணி – பங்களாதேஷ் அணியை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

யு.எஸ். ஓப்பன் டென்னிஸ் போட்டிகள் இன்று தொடங்குகின்றன.

இந்தியாவின் சார்பில் சுமித் நாகல், ரோஹன் போபண்ணா ஆகியோர் பங்கேற்கின்றனர்.

>>>>><<<<<

திண்டுக்கல்லில் நடைபெற்ற தேசிய அளவிலான சிலம்பம் போட்டிகளில் 200க்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்கேற்று, தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

**>>>>>END<<<<<**